முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No.556/2021**

Witness PW 1

| பெயர் | லட்சுமணன் | மதம் | |
|---|---|---|---|
| த/பெ | மொட்டைய கவுண்டர் | தொழில் | |
| ஊர் | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 13.03.2024 |

இன்று (13/03/2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

எத்தனை வருடங்களாக பொன்னங்குப்பத்தில் குடியிருக்கின்றேன் என்றால் நான் பிறந்ததிலிருந்து அங்கு தான் வசிக்கின்றேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் என்னுடைய பெயர் இல்லை என்று சொன்னால் சரியல்ல, என்னுடைய பெயரும் இருக்கின்றது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.39 ஆவணத்தில் என்னுடைய பெயர் இல்லை. வா.சா.ஆ.38 ஆவணத்தில் என் பெயர் இல்லை. மேலும் பர்குணன் மற்றும் ராமநாதன் ஆகியோர் பெயர்கள் இல்லை. 1ம் பிரதிவாதி மண்ணம்மாள் என்பவர் தான் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றும், எனக்கு அதில் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ரங்கநாதன் என்பவர் அவருடைய சொத்தை வழக்குகள் முடிந்த பின்பு மண்ணம்மாள் பெயரில் கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் நானும் சேர்ந்து சம்பாதித்து தான் வாங்கினேன். பத்திரம் எழுதிய விவரம் எனக்கு தெரியாது. நான் அன்னியூரில் இருந்ததால் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, நான் பொன்னங்குப்பத்தில் தான் இருந்தேன். தாவா சொத்துகள் அனைத்தும் எனது தகப்பனார் சம்பாதித்தவை என்றால் சரிதான். எனக்கும் சொத்துக்கும் சம்மந்தம் இல்லை என்பதால் தான் நான் வழக்கில் தரப்பினராக சேர்ந்து நடத்தாமல் அன்னியூரில் வசித்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல.1ம் பிரதிவாதி மண்ணம்மாள் பெயரில் சுமார் 17 வருடங்களுக்கு முன்பு எனது தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தினார். அவ்வாறு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியது எனக்கு தெரியாமல்

இருந்தது என்றால் சரிதான். சுமார் 3 வருடங்கள் கழித்து தான் அந்த ஆவணம் குறித்து எனக்கு தெரிய வந்தது. எனது தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திய பின்பு அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. தாவா சொத்து எனது தகப்பனாரின் சுயசம்பாத்தியம் என்றும், அதை 1ம் பிரதிவாதிக்கு முறையாக எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துகள் சுமார் 6 ஏக்கர்கள் இருக்கும். ரங்கநாதன் விற்பனை செய்த சொத்து 2 1/2 ஏக்கர் இருக்கும். எனது தகப்பனார் மண்ணம்மாள் பெயரில் செட்டில்மெண்ட் ஏற்படுத்திய சொத்து சுமார் 3 1/2 ஏக்கர் இருக்கும். 1ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலமாகவும், கிரையம் மூலமாகவும் தாவா சொத்துகள் பாத்தியம் என்றும், அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் 1985ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி 15 வருடம் கழித்து இறந்தார் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் மற்றும் கிரைய ஆவணங்கள் ஏற்பட்ட போது நான் ஊரிலேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துகளில் எனக்கு உரிமை இருந்தால் எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோதே வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. ரங்கநாதன் மண்ணம்மாள் பெயரில் கிரையம் ஏற்படுத்தி சுமார் 6 வருடங்கள் கழித்து இறந்துவிட்டார். வா.சா.ஆ.6 ஆவணம் குறித்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் தெரியும் என்றால் சரிதான். அந்த ஆவணம் நத்தம் புறம்போக்கு நிலத்திற்கான ஆவணம் என்றால் சரிதான். வீட்டு மனைக்காக அரசாங்கத்தால் வழங்கப்படுவது தான் அந்த பட்டா என்றால் சரிதான். அந்த பட்டாவில் மொட்டைய கவுண்டர் வாரிசுகள் என்று குறிப்பிட்டுள்ள காரணத்தால் தான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 12வது அயிட்ட சொத்தில் நாகப்பன் என்பவர் மெத்தை வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த வீடு சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. அந்த வீடு 30 வருடங்களுக்கு முன்பே கட்டப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பகுதியில் ஒரு கொட்டகை மற்றும் அமைத்து நாகப்பன் இருந்தார். அதை மாற்றி மெத்தை வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். கூட்டுபாக சொத்தில் அவர் இருப்பதாக சொல்லி அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

கூட்டு பாத்தியம் எதுவும் இல்லை என்ற காரணத்தால் தான் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாகப்பன் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(Sd/-N.S.Jayaprakash)
Principal Subordinate Judge,
Villupuram